# அரையாண்டு தேர்வு–2018
## பத்தாம் வகுப்பு

க.உமாநடேஸ் M.Sc.,B.Ed., பட்டதாரிஆசிரியர் (கணிதம்)

அரசு உயர்நிலைப்பள்ளி, ஜிஞ்சம்பட்டி, –635 104

**1. (b), 2. (d), 3. (b), 4.(a), 5.(c), 6. (d), 7. (b), 8. (d), 9. (b), 10.(b), 11.(c), 12. (c), 13. (b),14. (c), 15.(b)**

17 ,

### ஒரு கணத்தின் ஆதி எண்

ஒரு கணம் முடிவுறு கணம் எனில், அதில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையை அறிந்து கொள்வது பயனுள்ளதாகும்.

ஒரு முடிவுறு கணத்தில் உள்ள உறுப்புக்களின் எண்ணிக்கை அதன் ஆதி எண் எனப்படும்.

$A$ என்ற கணத்தின் ஆதி எண்ணை $n(A)$ எனக் குறிப்போம்.

19 , தீர்வு : கொடுக்கப்பட்ட சமன்பாடுகளின் தொகுப்பு

$$2x + 7y - 5 = 0$$
$$-3x + 8y + 11 = 0$$

குறுக்குப் பெருக்கல் முறையைப் பயன்படுத்த, கெழுக்களை அம்புக்குறிப் படத்தில் காட்டியவாறு அமைக்கிறோம்.




$$\Longrightarrow \frac{x}{(7)(11)-(8)(-5)} = \frac{y}{(-5)(-3)-(2)(11)} = \frac{1}{(2)(8)-(-3)(7)}.$$

$$\Longrightarrow \frac{x}{117} = \frac{y}{-7} = \frac{1}{37}.$$ எனவே, $x = \frac{117}{37}$, $y = -\frac{7}{37}$.

ஆகவே, தீர்வு $\left(\frac{117}{37}, -\frac{7}{37}\right)$ ஆகும்.

2 0 , **(ii)** கொடுக்கப்பட்ட மூலங்கள் $3+\sqrt{7}, 3-\sqrt{7}$ .

$\alpha$ மற்றும் $\beta$ என்பன கொடுக்கப்பட்ட சமன்பாட்டின் மூலங்கள் என்க.

மூலங்களின் கூடுதல், $\alpha + \beta = 3+\sqrt{7}+3-\sqrt{7} = 6$

மூலங்களின் பெருக்கற்பலன், $\alpha\beta = (3+\sqrt{7})(3-\sqrt{7}) = 9-7 = 2$

தேவையான சமன்பாடு, $x^2 -$ (மூலங்களின் கூடுதல்) $x +$ மூலங்களின் பெருக்கற்பலன் $= 0$.

எனவே, தேவையான சமன்பாடு $x^2 - 6x + 2 = 0$.

2 1 , வரையறை : $A$ என்ற அணியின் நிரைகளை நிரல்களாகவும் அல்லது நிரல்களை நிரைகளாகவும் மாற்றக் கிடைக்கும் அணி $A$-ன் நிரை நிரல் மாற்று அணி எனப்படும். $A$-ன் நிரை நிரல் மாற்று அணியை $A^T$ ($A$ transpose எனப்படிக்கவும்) எனக் குறிப்போம். எடுத்துக்காட்டாக,

$$A = \begin{pmatrix} 1 & 2 & 5 \\ 3 & 4 & 6 \end{pmatrix} \text{ எனில், } A^T = \begin{pmatrix} 1 & 3 \\ 2 & 4 \\ 5 & 6 \end{pmatrix}$$

பொதுவாக, $A = [a_{ij}]_{m\times n}$ . இங்கு $i = 1, 2, 3, \cdots, m$ மற்றும் $j = 1, 2, 3, \cdots, n$ எனில்,

$A^T = [b_{ij}]$ . இங்கு $b_{ij} = a_{ji}$, $i = 1, 2, \cdots, n$ மற்றும் $j = 1, 2, \cdots, m$.

2 2 , **(ii)** $A = \begin{pmatrix} 3 & -2 \\ 5 & 1 \end{pmatrix}$ மற்றும் $B = \begin{pmatrix} 4 & 1 \\ 2 & 7 \end{pmatrix}$ என்க.

அணி $A$-ன் வரிசை $2\times 2$ மற்றும் அணி $B$-ன் வரிசை $2\times 2$.

$A$-ன் நிரல்களின் எண்ணிக்கையும், $B$-ன் நிரைகளின் எண்ணிக்கையும் சமம்.

ஆகவே, $AB$ வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும் $AB = \begin{pmatrix} 3 & -2 \\ 5 & 1 \end{pmatrix}\begin{pmatrix} 4 & 1 \\ 2 & 7 \end{pmatrix}$

$$= \begin{pmatrix} (3)(4)+(-2)(2) & (3)(1)+(-2)(7) \\ (5)(4)+\ (1)(2) & (5)(1)+\ (1)(7) \end{pmatrix} = \begin{pmatrix} 12-4 & 3-14 \\ 20+2 & 5+7 \end{pmatrix} = \begin{pmatrix} 8 & -11 \\ 22 & 12 \end{pmatrix}$$

23. **தீர்வு: (i)** $A(0,0), B(3,0)$ மற்றும் $C(0,2)$ என்பன முக்கோணத்தின் உச்சிகள்.




$\Delta ABC$ பரப்பளவு $= \frac{1}{2}[(x_1y_2 + x_2y_3 + x_3y_1) - (x_2y_1 + x_3y_2 + x_1y_3)]$

$= \frac{1}{2}[(0+6+0) - (0+0+0)] = 3$ ச.அலகுகள்

24 , **தீர்வு: (i)**

ஒரு வட்டத்தில் $AB$ மற்றும் $CD$ என்ற இரு நாண்கள் ஒன்றையொன்று உட்புறமாக $P$ என்ற புள்ளியில் வெட்டிக்கொள்வதால்,




$$PA \times PB = PC \times PD$$

$$\Rightarrow \quad PD = \frac{PA \times PB}{PC} = \frac{8 \times 2}{4} = 4 \text{ செ.மீ.}$$

25 , தீர்வு தரைமட்டத்திலிருந்து காற்றாடிக்கு உள்ள தூரம் $h$ என்க.

படத்தில் $AC$ என்பது நூலின் நீளம் என்க.

$\angle CAB = 30^\circ$ மற்றும் $AC = 200$ மீ

என கொடுக்கப்பட்டுள்ளது.




படம் 7.7

செங்கோண $\triangle CAB$-ல் $\sin 30^\circ = \frac{h}{200}$

$$\Longrightarrow \quad h = 200 \sin 30^\circ$$

$$\therefore \quad h = 200 \times \frac{1}{2} = 100 \text{ மீ}$$

அதாவது தரை மட்டத்திலிருந்து காற்றாடியின் தூரம் 100மீ.

26 , **(i) $\sec^2\theta + \mathrm{cosec}^2\theta = \sec^2\theta\, \mathrm{cosec}^2\theta$**

**தீர்வு: (i)** $\sec^2\theta + \mathrm{cosec}^2\theta$

$$= \frac{1}{\cos^2\theta} + \frac{1}{\sin^2\theta} = \frac{\sin^2\theta + \cos^2\theta}{\cos^2\theta \sin^2\theta} = \frac{1}{\cos^2\theta \sin^2\theta}$$

$$= \sec^2\theta\, \mathrm{cosec}^2\theta$$

27 , **ஒரு உள்ளீடற்ற கோளத்தின் வெளி மற்றும் உள் ஆரங்கள் முறையே 12 செ.மீ மற்றும் 10 செ. மீ எனில், அக்கோளத்தின் கன அளவைக் காண்க.**

**தீர்வு:** $R$ மற்றும் $r$ என்பன உள்ளீடற்ற கோளத்தின் வெளிப்புற மற்றும் உட்புற ஆரம் என்க.

$R = 12$ செ.மீ மற்றும் $r = 10$ செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.




உள்ளீடற்ற கோளத்தின் கனஅளவு $= \frac{4}{3}\pi(R^3 - r^3)$

$$= \frac{4}{3} \times \frac{22}{7}(12^3 - 10^3) = \frac{88}{21}(1728 - 1000)$$

$$= \frac{88}{21} \times 728 = 3050\frac{2}{3} \text{ செ.மீ}^3.$$

28 , முதல் $n$ இயல் எண்களின் திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{n^2-1}{12}}$

ஆகவே, முதல் 13 இயல் எண்களின் திட்ட விலக்கம்

$$\sigma = \sqrt{\frac{n^2-1}{12}} = \sqrt{\frac{13^2-1}{12}} = \sqrt{\frac{168}{12}} = \sqrt{14} = 3.74$$

29 , **தீர்வு:** 100 சீட்டுகளில் 1 முதல் 100 வரை எண்களால் குறிக்கப்பட்டுள்ளன.

கூறுவெளி, $S = \{1, 2, 3, \cdots, 100\}$; $n(S) = 100$.

10 ஆல் வகுபடும் எண் உள்ள சீட்டு எடுப்பதற்கான நிகழ்ச்சியை $A$ என்க.

$A = \{10, 20, \cdots, 100\}$; $n(A) = 10$.

எனவே, $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{10}{100} = \frac{1}{10}$

30a தீர்வு தேவையான நேர்க்கோட்டின் சாய்வு $m = \tan\theta$

$= \tan 45° = 1$

(

$y$-வெட்டுத்துண்டு $c = \frac{2}{5}$

சாய்வு-வெட்டுத்துண்டு அமைப்பில் உள்ள நேர்க்கோட்டின் சமன்பாடு

$$y = mx + c$$

$$\Longrightarrow \quad y = x + \frac{2}{5}$$

$$\Longrightarrow \quad y = \frac{5x+2}{5}$$

எனவே, தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு $5x - 5y + 2 = 0$ ஆகும்.

30b தீர்வு $r$ மற்றும் $h$ என்பன முறையே நேர்வட்ட திண்ம உருளையின் ஆரம் மற்றும் உயரம் என்க.

இங்கு, $r = 7$ செ.மீ, $h = 20$ செ.மீ

தற்போது, வளைபரப்பு $= 2\pi rh$

$= 2 \times \frac{22}{7} \times 7 \times 20$

நேர்வட்ட உருளையின் வளைபரப்பு $= 880$ ச.செ.மீ

மேலும், மொத்தப் புறப்பரப்பு $= 2\pi r(h + r)$

$= 2 \times \frac{22}{7} \times 7 \times [20 + 7] = 44 \times 27$

எனவே, மொத்தப் புறப்பரப்பு $= 1188$ ச. செ.மீ.



படம் 8.9

31 **தீர்வு:** தேவையான இடைவெளியில் சார்பின் மதிப்புகளைக் காண்போம்.

$x = -3, -2, -1$ மற்றும் 1 எனும் போது $f(x) = 4x^2 - 1$.

எனவே, $f(-3) = 35$, $f(-2) = 15$, $f(-1) = 3$, $f(1) = 3$.

$x = 3, 4$ எனும் போது $f(x) = 3x - 2$.

எனவே, $f(3) = 7$ மற்றும் $f(4) = 10$.

எனவே, $x = 5$ மற்றும் 6 எனில், $f(x) = 2x - 3$.




$$f(5) = 7, \quad f(6) = 9$$

**(i)** $f(5) + f(6) = 7 + 9 = 16$

**(ii)** $f(1) - f(-3) = 3 - 35 = -32$

**(iii)** $f(-2) - f(4) = 15 - 10 = 5$

**(iv)** $\frac{f(3) + f(-1)}{2f(6) - f(1)} = \frac{7+3}{2(9)-3} = \frac{10}{15} = \frac{2}{3}$.

க.உமாநடேஸ் M.Sc.,B.Ed., பட்டதாரிஆசிரியர் (கணிதம்)
அரசு உயர்நிலைப்பள்ளி, ஜிஞ்சம்பட்டி, –635 104

32 (ii) தகுந்த வென்படங்கள் பின்வருமாறு.




படம் 1.10

படம் 1.10-ல் (2) மற்றும் (4)-லிருந்து $A \cap (B \cap C) = (A \cap B) \cap C$ என்பது சரிபார்க்கப்பட்டது.

33 **(ii)** $16^2 + 17^2 + 18^2 + \cdots + 25^2$

$$= (1^2 + 2^2 + 3^2 + \cdots + 25^2) - (1^2 + 2^2 + 3^2 + \cdots + 15^2)$$

$$= \sum_{k=1}^{25} k^2 - \sum_{k=1}^{15} k^2 . \qquad \left\{ \sum_{1}^{n} k^2 = \frac{n(n+1)(2n+1)}{6} . \right\}$$

$$= \frac{25(25+1)(50+1)}{6} - \frac{15(15+1)(30+1)}{6}$$

$$= \frac{(25)(26)(51)}{6} - \frac{(15)(16)(31)}{6} = 5525 - 1240 = 4285 .$$

34 **தீர்வு** அசல் = ₹500 மற்றும் கூட்டு வட்டி வீதம் 10%

ஒரு வருடத்திற்கான வட்டி $= 500\left(\frac{10}{100}\right) = 50 .$

2 ஆவது வருடத்திற்கான அசல் = முதல் வருட அசல் + வட்டி

$= 500 + 500\left(\frac{10}{100}\right) = 500\left(1 + \frac{10}{100}\right)$

2 ஆவது வருடத்திற்கான வட்டி $= \left(500\left(1 + \frac{10}{100}\right)\right)\left(\frac{10}{100}\right).$

3 ஆவது வருடத்திற்கான அசல் $= 500\left(1 + \frac{10}{100}\right) + 500\left(1 + \frac{10}{100}\right)\frac{10}{100}$

$= 500\left(1 + \frac{10}{100}\right)^2$

இவ்வாறு தொடர்ந்தால்,

$n$ ஆவது ஆண்டிற்கு அசல் $= 500\left(1 + \frac{10}{100}\right)^{n-1}.$

$(n-1)$ ஆவது ஆண்டு முடிவில் கிடைக்கும் மொத்த தொகை = $n$ ஆவது ஆண்டிற்கான அசல்.

ஆகவே, $n$ ஆவது ஆண்டு முடிவில் கிடைக்கும் மொத்த தொகை

$$= 500\left(1 + \frac{10}{100}\right)^{n-1} + 500\left(1 + \frac{10}{100}\right)^{n-1}\left(\frac{10}{100}\right) = 500\left(\frac{11}{10}\right)^n$$

10 ஆவது வருடமுடிவில் கிடைக்கும் மொத்த தொகை = ₹ $500\left(\frac{11}{10}\right)^{10}$.

36 **தீர்வு:**

| | $x^2 - 2x + 3$ |
|---|---|
| $x^2$ | $x^4 - 4x^3 + 10x^2 - 12x + 9$ |
| | $x^4$ |
| $2x^2 - 2x$ | $-4x^3 + 10x^2$ |
| | $-4x^3 + 4x^2$ |
| $2x^2 - 4x + 3$ | $6x^2 - 12x + 9$ |
| | $6x^2 - 12x + 9$ |
| | 0 |

எனவே, $\sqrt{x^4 - 4x^3 + 10x^2 - 12x + 9} = |x^2 - 2x + 3|$.

38 **தீர்வு:**

$$2X + 3Y = \begin{pmatrix} 2 & 3 \\ 4 & 0 \end{pmatrix} \quad \cdots(1)$$

$$3X + 2Y = \begin{pmatrix} 2 & -2 \\ -1 & 5 \end{pmatrix} \quad \cdots(2)$$

முதலில் $Y$-ஐ நீக்குவோம்,

$$(1)\times 2 \Rightarrow 4X + 6Y = 2\begin{pmatrix} 2 & 3 \\ 4 & 0 \end{pmatrix} = \begin{pmatrix} 4 & 6 \\ 8 & 0 \end{pmatrix} \quad \cdots(3)$$

$$(2)\times 3 \Rightarrow 9X + 6Y = 3\begin{pmatrix} 2 & -2 \\ -1 & 5 \end{pmatrix} = \begin{pmatrix} 6 & -6 \\ -3 & 15 \end{pmatrix} \quad \cdots(4)$$

(4)-லிருந்து (3)-ஐ கழிக்க கிடைப்பது

$$5X = \begin{pmatrix} 6 & -6 \\ -3 & 15 \end{pmatrix} - \begin{pmatrix} 4 & 6 \\ 8 & 0 \end{pmatrix} = \begin{pmatrix} 6 & -6 \\ -3 & 15 \end{pmatrix} + \begin{pmatrix} -4 & -6 \\ -8 & 0 \end{pmatrix}$$

$$= \begin{pmatrix} 2 & -12 \\ -11 & 15 \end{pmatrix} \Rightarrow X = \begin{bmatrix} \frac{2}{5} & -\frac{12}{5} \\ -\frac{11}{5} & 3 \end{bmatrix}$$

$X$-ஐ (1)-ல் பிரதியிட, நாம் பெறுவது

39 **$A(-5, 7)$, $B(-4, -5)$ மற்றும் $C(4, 5)$ ஆகியன $\triangle ABC$-ன் முனைகள் எனில், முக்கோணத்தின் குத்துயரங்களின் சாய்வுகளைக் காண்க.**

**தீர்வு**: $A(-5, 7)$, $B(-4, -5)$ மற்றும் $C(4, 5)$ ஆகியன $\triangle ABC$-ன் முனைகளாகும்.

$AD$, $BE$ மற்றும் $CF$ ஆகியன $\triangle ABC$-ன் குத்துக்கோடுகள் என்க.

$AB$-ன் சாய்வு $= \frac{-5-7}{-4+5} = -12$

குத்துக்கோடு $CF$ ஆனது $AB$-க்கு செங்குத்து என்பதால்,




$CF$-ன் சாய்வு $= \frac{1}{12}$.

$BC$-ன் சாய்வு $= \frac{5+5}{4+4} = \frac{10}{8} = \frac{5}{4}$.

குத்துக்கோடு $AD$ ஆனது $BC$-க்கு செங்குத்து என்பதால்,

$AD$-ன் சாய்வு $= \frac{-4}{5}$.

$AC$-ன் சாய்வு $\frac{5-7}{4+5} = \frac{-2}{9}$.

குத்துக்கோடு $BE$ ஆனது $CA$-க்கு செங்குத்து என்பதால், $BE$-ன் சாய்வு $= \frac{9}{2}$.

40 **தீர்வு** தேவையான நேர்க்கோடுகளின் $x$-வெட்டுத்துண்டு $a$ மற்றும் $y$-வெட்டுத்துண்டு $b$ என்க.

எனவே, $a + b = 5$ (கொடுக்கப்பட்டுள்ளது)

$\Longrightarrow \quad b = 5 - a$

வெட்டுத்துண்டு அமைப்பில் நேர்க்கோட்டின் சமன்பாடு

$$\frac{x}{a} + \frac{y}{b} = 1 \Longrightarrow \frac{x}{a} + \frac{y}{5-a} = 1$$

$$\Longrightarrow \frac{(5-a)x + ay}{a(5-a)} = 1$$

$$(5-a)x + ay = a(5-a) \quad (1)$$

இக்கோடு $(6, -2)$ என்ற புள்ளி வழிச் செல்வதால்,

$(1) \Longrightarrow \quad (5-a)6 + a(-2) = a(5-a)$

$\Longrightarrow \quad a^2 - 13a + 30 = 0.$

$\Longrightarrow \quad (a-3)(a-10) = 0$

எனவே, $a = 3$ அல்லது $a = 10$

$a = 3$ எனில், $(1) \Longrightarrow (5-3)x + 3y = 3(5-3)$

$\Longrightarrow \quad 2x + 3y - 6 = 0 \quad (2)$

$a = 10$ எனில், $(1) \Longrightarrow (5-10)x + 10y = 10(5-10)$

$\Longrightarrow \quad -5x + 10y = -50$

$\Longrightarrow \quad x - 2y - 10 = 0. \quad (3)$

தேவையான நேர்க்கோடுகளின் சமன்பாடுகள் $2x + 3y = 6$ மற்றும் $x - 2y - 10 = 0$.

41 **தீர்வு:** $AB$ என்பது விளக்கு கம்பத்தின் உயரம், $CD$ என்பது சிறுமியின் உயரம் மற்றும் $CE$ என்பது சிறுமியின் நிழலின் நீளம் என்க.




தூரம் = வேகம் × நேரம்

பின்னர், $AB = 3.6$ மீ, $CD = 120$ செ. மீ $= 1.2$ மீ

சிறுமி நடக்கும் வேகம் 0.6 மீ/வி என கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, 4 வினாடிகளில் சிறுமி கடந்த தொலைவு $AC = 4 \times 0.6 = 2.4$மீ

$\Delta ECD$ மற்றும் $\Delta EAB$ -யிலிருந்து, $CD \parallel AB$ என்பது தெளிவாகிறது.

$\angle ECD = \angle EAB$ [ஒத்த கோணங்கள்]

$\angle E = \angle E$ [பொதுக்கோணம்]

$\therefore$ வடிவொத்த முக்கோணங்களுக்கான AA விதிமுறையின்படி, $\Delta ECD \sim \Delta EAB$

ஆகவே, $\frac{EC}{EA} = \frac{CD}{AB}$

$$\frac{EC}{2.4 + EC} = \frac{1.2}{3.6} = \frac{1}{3} \Rightarrow 3EC = 2.4 + EC$$

$\Rightarrow \quad EC = 1.2$ மீ

ஆகவே, 4 வினாடிகளுக்கு பிறகு சிறுமியின் நிழலின் நீளம் 1.2 மீ ஆகும்.

42 **தீர்வு:** $R$ என்பது திண்ம கோளத்தின் ஆரம் என்க. $r_1, r_2$ மற்றும் $r_3$ என்பன புதிதாக வார்க்கப்படும் கோளங்களின் ஆரங்கள் என்க. $R = 18$ செ.மீ. $r_1 = 2$ செ.மீ மற்றும் $r_2 = 12$ செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.




மூன்று புதிய கோளங்களின் கனஅளவு = திண்மகோளத்தின்கனஅளவு

$$\frac{4}{3}\pi r_1^3 + \frac{4}{3}\pi r_2^3 + \frac{4}{3}\pi r_3^3 = \frac{4}{3}\pi R^3$$

$$\frac{4}{3}\pi (r_1^3 + r_2^3 + r_3^3) = \frac{4}{3} \times \pi \times R^3$$

$$2^3 + 12^3 + r_3^3 = 18^3$$

$$r_3^3 = 5832 - 1736 = 4096 = 16^3$$

$$\Rightarrow \quad r_3 = 16$$

ஆகவே, மூன்றவாது கோளத்தின் ஆரம் = 16 செ.மீ.

43 **தீர்வு :** $r$, $R$ மற்றும் $h$ என்பன முறையே உள்ளீடற்ற உருளையின் உள்ஆரம், வெளிஆரம் மற்றும் உயரம் என்க.

ஆகவே, $r = 12$ செ.மீ, $R = 18$ செ.மீ, $h = 14$ செ.மீ,




படம் 8.12

வளைபரப்பு $= 2\pi h(R+r)$

$= 2 \times \frac{22}{7} \times 14 \times (18+12)$

$= 2640$ ச.செ.மீ

மொத்தப் புறப்பரப்பு $= 2\pi(R+r)(R-r+h)$

$= 2 \times \frac{22}{7} \times (18+12)(18-12+14)$

$= 2 \times \frac{22}{7} \times 30 \times 20 = \frac{26400}{7}$.

ஆகவே, மொத்தப் புறப்பரப்பு $= 3771\frac{3}{7}$ ச.செ.மீ.

44 **தீர்வு** 30 மதிப்புகளின் கூட்டுச் சராசரி, $\overline{x} = 18$

எனவே, 30 மதிப்புகளின் கூட்டுத் தொகை, $\sum x = 30 \times 18 = 540$ $\quad (\overline{x} = \frac{\sum x}{n})$

திட்ட விலக்கம், $\sigma = 3$

$$\sigma^2 = \frac{\sum x^2}{\ } - \left(\frac{\sum x}{\ }\right)^2$$

$$\Longrightarrow \quad \frac{\sum x^2}{30} - 18^2 = 9$$

$$\Longrightarrow \quad \frac{\sum x^2}{30} - 324 = 9$$

$$\Longrightarrow \quad \sum x^2 - 9720 = 270 \Longrightarrow \sum x^2 = 9990$$

$\therefore \quad \sum x = 540$ மற்றும் $\sum x^2 = 9990$.

45a **தீர்வு:** பார்வைப் புள்ளி $C$ என்க . ஆற்றின் இரு கரைகளில் நேரெதிராக உள்ள இரு பொருட்களை $A$, $B$ என்க. $CD \perp AB$ என வரைக . $CD$ என்பது ஹெலிகாப்டருக்கும் ஆற்றுக்கும் இடையே உள்ள தூரம் என்க.

$CD = 700$ மீ, $\angle CAD = 30°$, $\angle CBD = 45°$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

செங்கோண $\Delta CDB$-ல், $\tan 45° = \frac{CD}{DB} \Rightarrow DB = CD = 700$மீ




செங்கோண $\Delta CAD$-ல், $\tan 30° = \frac{CD}{AD} \Rightarrow AD = \frac{CD}{\tan 30°}$

$AD = 700\sqrt{3}$ மீ

ஆற்றின் அகலம், $AB = AD + DB$

$= 700\sqrt{3} + 700 = 700(\sqrt{3} + 1) = 700(1.732 + 1)$

$= 700(2.732) = 1912.400 = 1912.4$ மீ

எனவே ,ஆற்றின் அகலம் 1912.4 மீ.

( 45 b **தீர்வு:** $A$ என்பது வடிவமைப்பிற்காக விருது பெறும் நிகழ்ச்சி மற்றும் $B$ என்பது சிறந்த முறையில் எரிபொருள் பயன்பாட்டிற்கான விருது பெறும் நிகழ்ச்சிகள் என்க.

$P(A) = 0.25$, $P(B) = 0.35$ மற்றும் $P(A \cap B) = 0.15$

**(i)** குறைந்தது ஏதாவது ஒரு விருது பெற நிகழ்தகவு ,

$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B) = 0.25 + 0.35 - 0.15 = 0.45$

**(ii)** ஒரே ஒரு விருது மட்டும் பெற நிகழ்தகவு,

$$P(A \cap \overline{B}) + P(\overline{A} \cap B) = [P(A) - P(A \cap B)] + [P(B) - P(A \cap B)]$$
$$= (0.25 - 0.15) + (0.35 - 0.15) = 0.10 + 0.20 = 0.3$$